# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 18.6.2019 | 1) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை காவலர் பணிக்கு பட்டப்படிப்பு தேர்ச்சி / சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்ற 18 நபர்களை வெளிக்கொணர்வு முறையில் ஒரு வருடத்திற்கு தூய்மைக் காவலர்களாக பணிபுரிய பணியமர்த்தி கொள்ள அனுமதித்து மாமன்ற தீர்மானம் எண். 50 நாள் 13.03.2018ன் படி மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களை மேலும் ஒரு வருடத்திற்கு CLC வெளிக்கொணர்வு முறையில் பணியமர்த்திக்கொள்ள அனுமதியும் அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 25,00,000/– னை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/4664/17 | 106) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டு பகுதிகளின் தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்குகள் இல்லாமல் இருப்பதால் இரவு நேரங்களில் பொது மக்கள் சென்று வர மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனை ஆய்வு செய்து உடன் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்க ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் கீழ்க்கண்ட தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்கவும், மின் வாரியத்திற்கு உரிய விண்ணப்பம் செய்து நடவடிக்கை எடுக்கவும் இதற்காகும் மின்வாரிய மதிப்பீட்டு கேட்பு தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 107)அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| வஎண் | தெருவின் பெயர் | வார்டு எண் | புதியதாக மின்வாரியம் மூலம் அமைக்கப்பட வேண்டிய விளக்குகள் | புதியதாக குழல் விளக்கு பொருத்திகள் மட்டும் அமைக்க வேண்டிய எண்ணிக்கை | மொத்த விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | ரஹ்மத் நகர் 1வது தெரு | 1 | 10 | – | 25 |
| 2 | ரஹ்மத் நகர்பள்ளி வாசல் தெரு | | | – | |
| 3 | ரஹ்மத் நகர் பள்ளிவாசல் பின் தெரு | | | – | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | முத்து நகர் | 3 | | | 28 |
| 5 | ஆசீர்வாத நகர் | | | | |
| 6 | V.M.S. நகர் | | | | |
| 7 | 4வது கேட் முதல் மீளவிட்டான் நுழைவாயில் பகுதி வரை | 32 | | 52 | 52 |
| 8 | K.T.C.. நகர் | 5 | 3 | -- | 3 |
| 9 | எம்பரர் தெரு | 24 | 3 | -- | 10 |
| 10 | பெரைரா தெரு | | 2 | -- | |
| 11 | பெரியகடை தெரு | | 1 | -- | |
| 12 | வடக்கு ராஜா தெரு | | 4 | -- | |
| 13 | தாமஸ் நகர் | 33 | 10 | -- | 10 |
| 14 | திரவிய நகர் | 34 | 5 | 5 | 13 |
| 15 | கதிர்வேல் நகர் | | 3 | -- | |
| 16 | மடத்தூர் நகர் | 34 | 1 | -- | 1 |
| 17 | பெரியசாமி நகர் | 50 | 9 | -- | 9 |
| 18 | பேரின்ப நகர் | 52 | 10 | -- | 10 |
| | **மொத்தம்** | | **104** | **57** | **161** |
| | **அலுவலகக் குறிப்பு:**<br>பொதுமக்கள் நலன் கருதி மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 01154/2019/E3 | | | | |
| | **3)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா பிரிவின் மூலம் கொசுப்புழுக்கள் ஒழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Abate என்கிற Temephos மருந்து மிகக் குறைந்த அளவு இருப்பு உள்ளதால் Temephos மருந்தினை கொள்முதல் செய்வதற்கு Tamil Nadu Medical Services Corporation Ltd. (TNMSC) அனுமதி பெற்ற M/s.Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 625/- + 18% GST வீதம் 10,000 லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 7,37,500/-னை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** ;மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/7958/13 | | | | 108)<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |
| | **4)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்- ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Re-development of Burial Ground in Thoothukudi Corporation under Thoothukudi Smart City Limited பணிக்காக ரூ. 4,51,55,000/-மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 06.03.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு S. Rambola<br>மதிப்பீட்டை விட 6.14 % அதிகம் (ரூ 3,45,82,104.40)<br>2) திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 11.51 % அதிகம் (ரூ 3,62,30,557/-) | | | | 109) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. Rambola என்பவரின் (மதிப்பீட்டை விட **6.44**% அதிகம் ( ரூ. 3,45,82,104.40) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.<br>திரு S. Rambola<br>மதிப்பீட்டை விட 4.20% அதிகம் **(ரூ.3,38,56,414.55)**<br>கொடுத்துள்ளனர்.<br>திரு. S. Rambola ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட ரூ **4.20** % அதிகம் (ரூ. **3,38,56,414.55)** பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் **272**–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக **5** % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட **4.20**% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேல் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>**1)** பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** ஸ்மார் சிட்டி திட்டப் பணியாக இருப்பதால் மதிப்பீட்டை விட **4.20**% அதிகமாக கொடுத்த திரு. S. Rambola ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File Nos. E1/03209/2015 (BUR) | |
| | **5)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Re-development of Old bus/stand with state of the art facilities Thoothukudi City Municipal Corporation in Thoothukudi Smart City Limited பணிக்காக ரூ. **53,40,00,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு **07.02.2019** அன்று ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூனறு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை **06.03.2019** அன்று திறக்கப்பட்டது.<br>**1)** திரு M/S.CIPL-AIDL(JV)<br>மதிப்பீட்டை விட **12.13** % அதிகம் (ரூ **53,42,60,457.28)**<br>**2)** திரு. M/S P &C Projects Pvt.Ltd.<br>மதிப்பீட்டை விட**23.45**% அதிகம் (ரூ **58,82,24,743.60)**<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. M/S.CIPL-AIDL(JV) என்பவரின் (மதிப்பீட்டை விட **12.13**% அதிகம் ( ரூ. 53,42,60,457.28) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.<br>திரு M/S.CIPL-AIDL(JV)<br>மதிப்பீட்டை விட 4.80% அதிகம் **(ரூ.49,93,28,573.31)**<br>கொடுத்துள்ளனர்.<br>திரு. M/S.CIPL-AIDL(JV) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட ரூ **4.80** % அதிகம் (ரூ. **49,93,28,573.31)** பொறியியல் | **110)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும்**2** அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | கையேடு பிரிவு II விதி எண் 272–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5 % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 4.80% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேல் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஸ்மார் சிட்டி திட்டப் பணியாக இருப்பதால் மதிப்பீட்டை விட 4.80% அதிகமாக கொடுத்த திரு. M/S.CIPL-AIDL(JV) ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File Nos. E1/03209/2015 (Bus Terminal) | |
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி Proposed Multi level car parking facility at Jeyaraj road near Municipal Corporation in Thoothukudi Smart City Limited பணிக்காக ரூ. 10,24,00,000/–மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 05.03.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு S. Sutharson<br>மதிப்பீட்டை விட 7.95 % அதிகம் (ரூ 7,48,35,619.20)<br>2) திரு. S. Rex<br>மதிப்பீட்டை விட13.07% அதிகம் (ரூ 7,83,91,279.67)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. Sutharson என்பவரின் (மதிப்பீட்டை விட 7.95% அதிகம் ரூ. 7,48,35,610.20) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.<br>திரு .S. Sutharson<br>மதிப்பீட்டை விட 4.19% அதிகம் (ரூ.7,22,34,375.70)<br>கொடுத்துள்ளனர்.<br>திரு. S. Sutharson ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட ரூ 4.19 % அதிகம் (ரூ. 7,22,34,375.70) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.7.2–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5 % வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 4.19% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேல் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 111) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ஸ்மார் சிட்டி திட்டப் பணியாக இருப்பதால் மதிப்பீட்டை விட 4.19% அதிகமாக கொடுத்த திரு. S. Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>File Nos. E1/03209/2015 (MLCP) | |
| | 7)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதிக்குட்பட்ட ராஜபாண்டி நகர் பகுதியில் அமைந்துள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்காக ரூ.25,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 26.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 26.02.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. **T. Murugan**<br>மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ. 22,23,025.00)<br>2திரு. **S.Rambola**<br>மதிப்பீட்டை விட 1.84 % அதிகம் (ரூ. 22,75,355.00<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினைவிட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. **T. Murugan** என்பவரின் (மதிப்பீட்டை விட 0.50 % குறைவு (ரூ.22,23,025.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்த திரு. **T. Murugan** ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**File No. E2/002328/2019** | **112.** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | **8)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொது நிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வள்ளிநாயகபுரம் மெயின் ரோடு (பிரையண்ட் நகர் 12 முதல் கோர்ட்ஸ் நகர் வரை) பகுதியில் அமைந்துள்ள தார் சாலையினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளல் பணிக்காக ரூ. 21,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 21.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறை 21.12.2019 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. **S. Rambola**<br>மதிப்பீட்டை விட 10.29 % குறைவு (ரூ. 16,65,715.00)<br>2)திரு. **K.Muthuraman**<br>மதிப்பீட்டை விட 4.51 % குறைவு (ரூ. 17,73,125.00)<br>3) திரு.V. Thangaraj<br>மதிப்பீட்டை விட 2.46 % குறைவு (ரூ. 18,11,155.00) | **113)** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினைவிட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. **S. Rambola**.,என்பவரின் (மதிப்பீட்டை விட **10.29** % குறைவு (ரூ.**16,65,715.00**) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட **10.29**% குறைவாக கொடுத்த திரு. **S. Rambola** ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். E2/00240/2019 | |
| | **9)**இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதி வார்டு எண்.**55** சுபாஷ் நகர் **1** மற்றும் **3**வது தெருப் பகுதியில் அமைந்துள்ள சேதமடைந்த நிலையில் இருப்பது– புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்காக ரூ.**25,50,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு **28.12.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை **26.12.2018** அன்று திறக்கப்பட்டது.<br>**1)** திரு. **S.Rambola**<br>மதிப்பீட்டை விட **0.50**% குறைவு (ரூ. **18,30,445.00)**<br>**2**திரு. S. Sutharson<br>மதிப்பீட்டை விட **1.50 %** அதிகம் (ரூ. **18,67,115.00**<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினைவிட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. **S.Rambola** என்பவரின் (மதிப்பீட்டை விட **0.50** % குறைவு (ரூ.**18,30,445.00**) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1)**பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**மதிப்பீட்டை விட **0.50**% குறைவாக கொடுத்த திரு. **S.Rambola** ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**File No. E2/04178-12/2018** | **114)** அலுவலகக்குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக் கப்பட்டது |
| | **10)** தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மழைநீர் வடிகால்களில் பெரும்பாலனவை மற்றும் நகரின் வெளிப்புறத்திலிருந்து வரும் மழைநீர் இந்நகரின் பிரதான வடிகால் அமைப்பான சுமார் 7 கி.மீ. நீளமுள்ள பக்கிள் ஓடையின் வழியாக கடலில் சென்று கலக்கிறது. இதில் எதிர்பாராத மற்றும் தவிர்க்க இயலாத காரணங்களால் இவ்வடிகால்களில் சேரும் திடக்கழிவுகள் மற்றும் இந்நகர், கடற்கரையோர மணல் சார்ந்த பகுதியாக இருப்பதால் அதிகப்படியான மண் துகள்கள் போன்றவற்றால் படிந்து சேரும் சகதியாக மாறி புல் புதர்களால் ஆக்கிரமிப்பிக்கப்படுகிறது. இதனால் மழை மற்றும் பெரு வெள்ளம் போன்ற காலங்களில் இவ்வடிகால் வழியாக செல்ல வேண்டிய மழைநீர் தடைபடுவதோடு வெள்ளநீர் | **115)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | குடியிருப்பு பகுதிகளுக்கு புகக்கூடிய சூழலும் உருவாகும்., மேலும் நாள்பட்ட கழிவுகள் மற்றும் தேக்கங்களால் துர்நாற்றம் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலை உள்ளது. இந்நிலையில் இவ்வடிகால்களை சுத்தம் செய்ய நடைமுறையிலுள்ள டிராக்டர் மற்றும் JCB இயந்திரங்களை பயன்படுத்தினாலும் முழுமையாக சுத்தம் செய்ய இயலாததோடு மனித சக்திகளை ஏற்படுத்துவது நடைமுறை சட்டங்களை மீறுவதாக உள்ளதால் இவ்வடிகால்களை சுத்தம் செய்ய பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட Power Tiller with Dozer பயன்படுத்தும்பட்சத்தில் முழுமையாக சுத்தம் செய்ய இயலுவதோடு தொடர்ந்து தூய்மையாக பராமரிக்கவும் இயலும், எனவே மேற்படி இயந்திரத்தை விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 3.50 இலட்சத்தினை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>எச்2/1634/19 | |
| | 11) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற் கொள்ளுதலில் இம்மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் இவ்வலுவலகத்திலுள்ள இலகுரக வாகனங்களை (LCV) பயன்படுத்தி 45 வார்டுகளில் சுய உதவிக் குழுக்களின் மூலம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் மற்றும் குப்பைகளை தரம் பிரித்து சேகரிப்பதில் விற்பனைக்கு ஏற்புடைய பொருட்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் நேரடியாக பெற்று முழுமையடைந்து வருகின்றனர். மீதமள்ள 15 வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்களின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் இம்மாநகராட்சியிலுள்ள இதர குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கவும், வேலை வாய்ப்பினை பெருக்குவதற்கும் மேற்படி முறையில் மாநகராட்சியில் நேரடியாக பணிபுரிய ஆர்வம் காட்டும் நிலையில் இம்மாநகராட்சியில் போதிய வாகனங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் மேற்படி சுய உதவிக்குழு உறுப்பினர்களை பணிக்கு நேரடியாக ஈடுபடுத்த இயலவில்லை.<br><br>மேற்படி பொருள் தொடர்பாக தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 2014–2015 மற்றும் 2015–2016 நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் செலவினம் போக மீதமுள்ள தொகையின் மூலம் இலகுரக வாகனங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்தி மேற்படி ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் 15 வார்டுகளிலும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தரும் பொருட்டு சுமார் 250உறுப்பினர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு மற்றும் பலன்கள் கிடைக்கும் பொருட்டு 28 டாடா எஸ். இலகுரக வாகனங்களில் மேற்படி தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் மாநகராட்சி வசமுள்ள செலவிடப்படாத நிதியினை பயன்படுத்தி 20 டாடா எஸ். இலகுரக வாகனங்களும், மாநகராட்சி பொது நிதியிலிருந்து மீதமுள்ள 8 டாடா எஸ் இலகுரக வாகனங்களும் அரசின் மீன் சந்தை விலையில் (GEM Rates) கொள்முதல் செய்து மேற்படி 15 வார்டுகளில் | 116) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | சுய உதவி குழுக்கள் மூலம் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/5413/15 | |
| | **12)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின்படி தனி நபர் கழிப்பறை கட்டுதல் கணக்கெடுப்பின்படி **3848** வீடுகள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் **2196** வீடுகளில் தனி நபர் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது . மீதம் உள்ள **1652** தனி நபர் கழிப்பறைகள் கட்டி முடிக்க அப்பகுதிகளில் உள்ள மக்களிடம் போதிய பொருளாதார வசதி இன்மை காரணத்தினால் அரசு மானியம் ரூ. **8000/–** கழித்து மீதம் ரூ. **4000/–** வீதம் **1652** கழிப்பறைக்கு மொத்த தொகை ரூ. **66,08,000/–** மாநகராட்சி பொது நிதியில் இருந்து அவசர அவசியம் கருதி மேற்கொள்ளவும், பிற்காலத்தில் CSR நிதி மூலம் இதனை ஈடு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்3/3603/15 | **117)** அலுவலகக் குறிப்பு |
| | **13)** இம்மாநகராட்சியின் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காணத்தினால் மேற்படி பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் நிர்வாக இடர்பாடுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிகளுக்கு Electrician, Pump operator, Lab attende, Technical Helper, Turn cock Line Man, Skilled fitter ஆகிய நிலைகளில் மொத்தம் **55** மனித ஆற்றல்கள் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலம் ஈடுபடுத்தவும், இப்பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தினக்கூலி (PWD SOR/District Collector Approval Rate) ஊதிய விகிதத்தில் **01.04.2019** முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளவும், ஓராண்டு காலத்திற்கு இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. **100.00** இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :**<br>**1)** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>**2)** மேற்படி பணியாளர்களுக்கு ஏப்ரல் **2019**ம் மாத ஊதியம் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் ஏற்பளிக்கலாம். ந.க.எண். **3874/18/**இ**2** (CLC) | **118)** அலுவலகக் குறிப்பு **1** ஒப்புதல் வழங்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு **2** ஏற்பளிக்கப்பட்டது . |
| | **14)**தூத்துக்குடி மாநகராட்சி– பொது சுகாதாரம்– திடக்கழிவு மேலாண்மை–குப்பைகளை பிரித்து சேகரித்து அவற்றில் மக்கும் குப்பைகள் நகரில் **16** இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுரமாக்கும் மையங்கள் மூலம் உரமாக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி நுண்ணுரமாக்கல் மையங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள், கன்வேயர்கள், மின் சாதனங்கள், மின் அமைப்புகள், எடை இயந்திரங்கள், குழாய்கள் மற்றும் இதர அமைப்புகளில் அவ்வப்போது பழுதுகள் | **119)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஏற்படுவதால் தொடர்ந்து நுண்ணுரமாக்கல் மையத்தை பயன்படுத்த இயலுவதில்லை எனவும், இதனால் அப்பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை அப்புறப்படுத்துவதில் சிரமம் நிலவுவதோடு கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்வதால் வாகனம் மற்றும் எரிபொருள் செலவீனம் அதிகரிக்கும் நிலையுள்ளது. இவற்றை தடுக்கவும் நுண்ணுரமாக்கல் மையங்களை தொய்வின்றி பயன்படுத்தவும் ஏதுவாக மேற்குறிப்பிட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய இதர அமைப்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும் முன் எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மற்றும் பராமரிப்பு பணிகளை ஆண்டு முழுவதும் (AMC) மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தக்காரரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ள சுகாதார அலுவலர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் அறிவுரைப்படி சான்றளிக்கப்பட்ட பொறியாளரிடம் ஒப்புதல் பெற்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>மேற்படி, மேற்குறிப்பிட்டுள்ள இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காகும், ஓராண்டிற்கான உத்தேச செலவுத்தொகை ரூ. 23,35,000/–னை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/01764/2019 | |
| | **15)** தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் பன்றிகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதால் பொதுமக்களின் புகார்கள் அடிப்படையிலும், மேலும், தூத்தக்குடி மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் அறிக்கையிலும் பன்றித் தொல்லைகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பன்றிகளின் மூலம் நோய்கள் பரவாமல் தடுக்கும் வண்ணமாக பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு மாமன்ற அனுமதியும், அதற்காகும் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/4039/2015 | **120)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 18.06.2019